**தலைப்பு 431 – தென்னை, கித்துள் மற்றும் பனை செய்கை மேம்பாடு மற்றும் அவை சார்ந்த கைத்தொழில் பண்டங்கள் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சு**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

தென்னை, கித்துல் மற்றும் பனை செய்கை மேம்பாடு மற்றும் அவை சார்ந்த கைத்தொழில் பண்டங்கள் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் தென்னை, கித்துல் மற்றும் பனை செய்கை மேம்பாடு மற்றும் அவை சார்ந்த கைத்தொழில் பண்டங்கள் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 செப்டெம்பர் 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தென்னை, கித்துல் மற்றும் பனை செய்கை மேம்பாடு மற்றும் அவை சார்ந்த கைத்தொழில் பண்டங்கள் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு அமைச்சின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் / கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

1.5 **ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருந்ததெனவும்,

(ஆ) முன்னைய வருடத்திற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் செய்யப்பட்டிருந்த கீழே குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் 10 மீண்டெழும் செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 128,653,500 கூட்டுத் தொகையான தேறிய ஏற்பாடுகளில், மீளாய்வாண்டில் ரூபா 48,651,121 ஆன தொகையொன்று அதாவது தேறிய ஏற்பாட்டுத் தொகையில் 20 சதவீதம் தொடக்கம் 85 சதவீதம் வரையான வீச்சிலான சதவீதமொன்று பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை. | இது அமைச்சின் அமைச்சரின் பதவியணியினரின் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடு ஆகும். அமைச்சு ஆரம்பித்தல் சிக்கலானதாக இருந்தமையால் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 2020 திசெம்பர் மாதம் வரையிலும் பூரணப்படுத்தப்பட்டிருக கவில்லை. அதனால் செயற்பாட்டு செலவினங்கள் குறைவடைந்திருந்தது. | ஒதுக்கப்பட்ட முழுமையான ஏற்பாடுகளும் பயன்படுத்தப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் 07 மூலதன செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 1,172,630,000 கூட்டுத் தொகையான தேறிய ஏற்பாடுகளில், மீளாய்வாண்டில் ரூபா 463,241,357 ஆன தொகையொன்று அதாவது தேறிய ஏற்பாட்டுத் தொகையில் 13 சதவீதம் தொடக்கம் 100 சதவீதம் வரையான வீச்சிலான சதவீதமொன்று | அமைச்சு புதிதாக ஆரம்பிக்கப்பட்டிருந்தமையின ால் இயந்திர உபகரணங்கள், கட்டிடங்கள், வாகனங்களை மெருகூட்டுதல் போன்றவைகளுக்காக செலவினங்கள் செய்யப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே 2020 ஆம் ஆண்டில் காணப்பட்ட கொவிட் 19 நோய் நிலைமையின் காரணமாக அபிவிருத்தி செயற்பாடுகளை அமுல்படுத்துவதில் | மூலதன செலவின விடயத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடுகளை பயன்படுத்துவதற்காக ஆண்டின் ஆரம்பம் முதல் செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சேமிக்கப்பட்டிருந்தது. | தாமதங்கள் ஏற்பட்டிருந்தமையினால் அந்த செலவின விடயங்களில் செலவினங்கள் குறைவடைந்திருந்தது. | |
| (இ) | மீளாய்வாண்டில் தரிசு நிலங்களில் வணிக ரீதியான நோக்கங்களில் தென்னைப் பயிர் செய்கை, கித்துள் உற்பத்தியை மேம்படுத்துதல் உள்ளூர் பனைக் கைத்தொழிலை பல்வகைப்படுத்தல் ஆகிய 03 அபிவிருத்தி திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 400,000,000 கூட்டுத்தொகையான குறைநிரப்பு ஒதுக்கங்களில் ரூபா 244,024,218 அதாவது 82 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. குறிப்பிட்ட பணிகள் திட்டமிட்டபடி வருடத்திற்குள் முடிப்பதற்கு முடியாதிருந்தது. | வரவு செலவுத் திட்ட முன்மொழிவில் தென்னை பயிர் செய்கை சபைக்கு ‘‘தீவின் தரிசு நிலங்களின் உற்பத்தியை அலகுகளாக மாற்றும் செயற்திட்டம் ‘‘ இற்காக ரூபா 248 மில்லியன் ஒதுக்கப்பட்டது.<br><br>இச் செயற்திட்டத்திற்கான ரூபா 148 மில்லியன் மீண்டும் 2021 செப்டெம்பர் 15 ஆந் திகதி கையளிக்கப்பட்டுள்ளது. இச் செயற்திட்டத்திற்காக தென்னை பயிர்ச் செய்கை சபையின் மூலம் விண்ணப்பங்கள் கொண்டு வரப்பட்டு ஆரம்பக் காணி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் தென்னைப் பயிர் செய்கைக்கு அங்கீகாரம் பெறுவதற்காக விவசாயிகள் சேவைகள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தும் அக்காணிக்காகத் தேவையான அங்கீகாரம் வழங்கப்படவில்லை.<br>கித்துள் உற்பத்தியை மேம்படுத்துவதற்காக இச் செலவு விடயத்தின் கீழ் மாவட்ட அலுவலகங்களுக்கு நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளன. கட்டு நிதி கிடைக்காமை காரணமாக ரூபா 44.3 மில்லியன் பற்றுச்சீட்டுக்கள் மிகுதியாக இருந்தன. எனவே நிதி முன்னேற்றம் குறைந்த அளவில் காணப்பட்டது.<br>உள்ளூர் பனை கைத்தொழிலுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 200 மில்லியன் தொகையில் பனை உற்பத்தி | குறை நிரப்பு செலவின விடயத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடுகளை பயன்படுத்துவதற்காக ஆண்டின் ஆரம்பம் முதல் செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

இயந்திரங்களில் உள்ள பிரச்சினைகள் காரணமாக மற்றும் காணிப் பிரச்சினைகள் காரணமாக ஒதுக்கங்களில் செலவுகளை மேற்கொள்வது மட்டுப்படுத்தப்பட்டது.

## 2.2 சட்டங்கள், விதிகள். மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| அவதானிப்புக்கள் | | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள். மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | **பெறுமதி** | **இணங்காமை** | | |
| | **ரூபா** | | | |
| 2021 நவம்பர் 26 ஆந் திகதிய 2021/03 ஆம் இலக்க அரச கணக்குகள் வழிகாட்டல் சுற்றறிக்கையின் 7.6 ஆம் பந்தி. | 1,910,325 | அரச உத்தியோகத்தரின் முற்பணக் கணக்கில் குறுக்குப் பதிவுகளின் மூலம் பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் காசுப் பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும், குறுக்குப் பதிவுகள் மூலம் கொடுப்பனவுகள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை | காசுப்பாய்ச்சல் கூற்றில் அரச உத்தியோகத்தரின் முற்பண பீ கணக்கின் மீதிகள் குறிப்பிடப்படும் போது குறுக்குப் பதிவுகள் முலம் பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் உள்ளடக்கப்படுதலானது தவற விடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அரச உத்தியோகத்தரின் முற்பணக் கணக்கில பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுப் பெறுமதிகளும் சேர்க்கப்பட வேண்டுமென்பதை ஏற்றுக்கொள்கின்றேன். | அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்று சரியாகத் தயாரிக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

--------------------------------------

### 3.1 பணம் விடுவிக்கப்பட்டும் முன்னேற்றமொன்று பெறப்படாத செயற்திட்டங்கள்

---------------------------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நாடெங்கிலும் காணப்பட்ட தரிசு நிலங்களை ''பயனுள்ள வணிக அலகு'' களாக மாற்றுவதற்கு வழங்கப்பட்டிருந்த தொகையில் ரூபா 17,690,000 தென்னைப் பயிர்செய்கை சபைக்கு வழங்கப்பட்டிருந்தது. இதில் 2500 ஏக்கர் 500 பயனாளிகளுக்காக 1 ஏக்கருக்கு ரூபா 80,000 ஆன நிதி உதவி, ரூபா 150,000 ஆன கடன் உதவி மற்றும் தென்னங்கன்றுகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்டிருந்ததுடன் 753 பயிர்ச்செய்கையினர் 959 ஏக்கர் தென்னைப் பயிர்செய்கைக்கு விண்ணப்பித்துள்ளனர். பழைய தரிசு நிலங்களில் தென்னைப் பயிர்ச் செய்கைக்காக விவசாய சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட வேண்டிய போதிலும் அக் காணி பரிசோதனை செய்யப்பட்டு அங்கீகாரம் வழங்கப்படாமையால் செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | இச் செயற்திட்டத்திற்காக தென்னை பயிர்ச் செய்கை சபையின் மூலம் விண்ணப்பங்கள் கொண்டு வரப்பட்டு ஆரம்பக் காணி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் தென்னைப் பயிர் செய்கைக்கு அங்கீகாரம் பெறுவதற்காக விவசாயிகள் சேவைகள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தும் அக்காணிக்காகத் தேவையான அங்கீகாரம் வழங்கப்பட்டிருக்கவில்லை. | நடைமுறைச் செயலகத்தைக் கருத்திற்கொண்டு செயற்திட்டடம் தயாரிக்கப்படல் வேண்டும். . |
| (ஆ) | கித்துள் துறையை மேம்படுத்தும் 8 செயற்திட்டங்கள் உட்பட 11 மாவட்டச் செயலகங்களுக்குட்பட்ட 70 பிரதேச செயலகங்களில் 5093 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு அந்த 11 மாவட்டச் செயலகங்களுக்கு | கித்துள் உற்பத்தியை மேம்படுத்துவதற்காக இந்த ஒதுக்கங்கள் ஒதுக்கப்பட்டிருந்தது. இச் செலவு விடயத்தின் கீழ் கித்துள் உற்பத்தியை மேம்படுத்துவதற்காக மாவட்ட அலுவலகங்களுக்கு நிதி ஏற்பாடுகள் | நடைமுறைச் செயலகத்தைக் கருத்திற்கொண்டு செயற்திட்டடம் தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 65,487,500 ஆன தொகை வழங்கப்பட்டிருந்தது. 2021 திசெம்பர் 31 இல் 11 மாவட்டச் செயலகங்களினால் ரூபா 28,403,882 ஆனது செலவிடப்பட்டிருந்ததுடன் 05 மாவட்டங்களில் 06 கித்துள் உற்பத்தி விற்பனை நிலையங்களை நிர்மாணிப்பதற்கு ரூபா 21,586,207 ஆன நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்தும் அந் நிர்மாணங்கள் மேற்கொள்ளப்படவில்லை. | ஒதுக்கப்பட்டுள்ளன. கட்டு நிதி கிடைக்காமை காரணமாக ரூபா 44.3 மில்லியன் பற்றுச்சீட்டுக்கள் மிகுதியாக இருந்தன. எனவே நிதி முன்னேற்றம் குறைந்த அளவில் காணப்பட்டது. | |
| **(இ)** | உள்ளூர் பனைக் கைத்தொழிலை பன்முகப்படுத்துவதற்காக பனை அபிவிருத்திச் சபைக்கு ரூபா 86,320,000 வழங்கப்பட்டிருந்ததுடன் பனை அபிவிருத்திச் சபைக்கு கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்காக கட்டிடத் திணைக்களத்திற்கு ரூபா 22,000,000 பணம் வழங்கப்பட்டிருந்தது. இதில் உள்ளூர் பனைக் கைத்தொழிலை பன்முகப்படுத்துவதற்காக எதிர்பார்க்கப்பட்ட 06 குறிக்கோள்கள் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் அக்குறிக்கோள்களில் பனை வளங்கள் அபிவிருத்தி, தொழில் நுட்ப பயிற்சி, பனை தொடர்பான உற்பத்தி மற்றும் பனை தொடர்பான உற்பத்திகளின் விற்பனை போன்ற 04 பணிகளுக்காக மட்டும் ரூபா 17,170,000 அதாவது 15 சதவீதம் செலவிடப்பட்டது. அத்துடன் பனை அபிவிருத்திச் சபையின் கட்டிடம் நிர்மாணம் இதுவரை ஆரம்பிக்கப்படவில்லை. | உள்ளூர் பனை கைத்தொழிலுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 200 மில்லியன் தொகையில் பனை உற்பத்தி இயந்திரங்களில் உள்ள பிரச்சினைகள் காரணமாக மற்றும் காணிப் பிரச்சினைகள் காரணமாக ஒதுக்கங்களில் செலவுகளை மேற்கொள்வது மட்டுப்படுத்தப்பட்டது. | செயற்திட்டங்களுக்கான மதிப்பீடுகளைத் தயாரிக்கும் போது நிறைவேற்றப்பட முடியுமான செயற்பாடுகளின் அளவிற்கேற்ப நிதியேற்பாடுகள் ஒதுக்கப்படல் வேண்டும். |